1973 ஏப்ரல் 5]

திரு. கா. வேழவேந்தன் : ஒவ்வொரு ஆண்டு மழைகாலத்தின் போதும் இந்த இசா ஏரியின் எதிர்முனையில் உள்ள தொளவேடு கிராமம் பாதிக்கப்படுகிற காரணத்தினால் இந்த ஆண்டே இதனை எடுத்து நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது உள்ளூர் அதிகாரிகளின் பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னேன். தலைமைப் பொறியாளரின் கவனத்திற்கு வந்தபிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

காரணி கிராமத்தில் ஆரணி ஆற்றின் கரைகளுக்குத் தடுப்புச்சுவர்

*** 635 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், காரணி கிராமத்தில் ஆரணி ஆற்றின் அரிப்பைத் தடுக்க காரைத் தடுப்புச்சுவர் (Revetment) அமைப்பதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்திற்கு ரூ. 1,05,000-க்கு ஒரு மதிப்பீடு பொதுப்பணித்துறை அலுவலரால் தயாரிக்கப்பட்டு, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியருடைய ஒப்புதலுக்கும், நிதி ஒதுக்கவும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவரது பதில் கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : என்னுடைய சொந்தக் கிராமமாகிய காரணி கிராமம் ஆரணியாற்றின் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப்பெற்று இந்தத் திட்டத்தை இவ்வாண்டே நிறைவேற்றித் தருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாவட்ட ஆட்சித் தலைவரின் பதில் கிடைத்தவுடன் நிறைவேற்றி வைக்கப்படும்.

வெற்றிலை சாகுபடி

*** 636 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது எத்தனை ஏக்கர் நிலத்தில் வெற்றிலை சாகுபடி எவ்வளவு செய்யப்படுகிறது, மாவட்டவாரியாக ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழகத்தில் தற்போது மாவட்ட வாரியாக வெற்றிலை சாகுபடியாகும் பரப்பளவு :—

மாவட்டம்.	பரப்பளவு.
செங்கல்பட்டு	187 ஹெக்டர்.
தென் ஆற்காடு	451 ஹெக்டர்.
வட ஆற்காடு	268 ஹெக்டர்.
சேலம்	901 ஹெக்டர்.
தருமபுரி	819 ஹெக்டர்.
கோயம்புத்தூர்	461 ஹெக்டர்.
தஞ்சாவூர்	634 ஹெக்டர்.
திருச்சிராப்பள்ளி	582 ஹெக்டர்.
மதுரை	893 ஹெக்டர்.
இராமநாதபுரம்	256 ஹெக்டர்.
திருநெல்வேலி	556 ஹெக்டர்.
கன்னியாகுமரி	69 ஹெக்டர்.
மொத்தம்	6,077 ஹெக்டர்.

* 637 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) the places where betal leaves are cultivated in the State; and

(*b*) the incentives offered to these cultivators ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) தமிழ்நாட்டில் நீலகிரி, சென்னை மாவட்டங்கள்தவிர மற்ற மாவட்டங்களில் வெற்றிலை பயிரிடப்படுகிறது.

(இ) தமிழ் நாட்டில் வெற்றிலை பயிரிடுவோர்க்கு விசேடமான சலுகைகள் ஏதும் அளிக்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : வெற்றிலை போடக்கூடியவர்கள் தமிழ் நாட்டில் அதிகமாக இருக்கிற காரணத்தினால், வெற்றிலை பயிரிடக் கூடியவர்களுக்கு இனிமேலாவது கடனுகவாவது, மானிய மாகவாவது உதவி செய்ய அரசு முன்வருமா ?